# உலக தூதுரைப் பணி ஞாயிறு

## 20 அக்டோபர் 2024

### தமிழக நற்செய்தி அறிவிப்பு பணிக்குழு

### எம்மாவுஸ்

**கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே!**

இன்று **உலக தூதுரைப் பணி** ஞாயிறு. இன்றைய திருவழிபாட்டில், திருமுழுக்கு பெற்ற நாம் அனைவரும்: ஒன்றிப்பு, பங்கேற்பு, தூதுரைப்பணி என்ற முப்பரிணாமக் குறிக்கோளுடன், கூட்டியக்கத் திருஅவையாக, ஈடுபாட்டுணர்வுடன் இத்திருவழிபாட்டில் பங்கேற்க அன்புடன் அழைக்கிறேன்.

இன்றைய நாளின் மையசெய்தியாக, மத்தேயு நற்செய்தியில் காணப்படும் திருமணவிருந்து உவமையை, திருத்தந்தை தேர்வு செய்துள்ளார்கள். **உலக தூதுரைப்** பணிக்குறிய காலம் என்பது, ஆண்டவரின் முதல் வருகைக்கும், இரண்டாம் வருகைக்கும், இடைப்பட்ட காலமாகும். எனவே **உலக தூதுரைப்பணி** என்பது ஆண்டவர் வரும்வரை, எல்லோரும் இறைவனை சந்தித்து, அவரோடு உறவு கொள்ள, பணியாளர்கள் சலிப்பின்றி அனைவரையும் அணுகி அழைப்பதாகும். அழைக்கப்பெற்றவர்கள் கண்டுகொள்ளாமல், அழைப்பை நிராகரித்தாலும், இறைவன் தன் பேரன்பாலும், இரக்கத்தாலும், மானிடரை எதிர்கொண்டு சந்தித்து, இறையாட்சியின் மகிழ்ச்சியில் கலந்து கொள்ள, இடைவிடாமல் அழைத்துக்கொண்டே இருக்கின்றார்.

திருமண விருந்து உவமையில், அரசரின் அழைப்பு '**எல்லோருக்குமானது**'. '**யாரும் விடுபட்டு விடக்கூடாது'** என்பதே தூதுரைப் பணியின் முக்கிய நோக்கம். உவமையில் வரும் அரசரின் கட்டளையை ஏற்ற பணியாளர்கள், ''**வழியில் கண்ட நல்லோர் தீயோர் யாவரையும் கூட்டி வந்தார்கள்**''. ஆக **தூதுரைப்** பணிகள் அனைத்தும் கிறிஸ்துவின் இதய ஆழத்தினின்றே பிறக்கின்றன. எதற்காக...? **'அனைவரையும் அவர்பால் ஈர்த்துக்கொள்ளவே'**. ''**ஏனெனில் எல்லா மனிதரும் மீட்புப் பெறவும், உண்மையை அறிந்துணரவும் அவர் விரும்புகிறார்**''(1திமோ.2:4) எனவே நமது தூதுரைப்பணி செயல்பாடுகளில், அவரவர் வாழ்கை நிலைக்கேற்ப, நற்செய்தியை 'அனைவருக்குமே' அறிவிக்க பணிக்கப் பெற்றுள்ளோம் என்பதை மறந்து விட கூடாது. அனைவருக்கும் நற்செய்தி அறிவிக்க, நம் அனைவருடைய உள்ளார்ந்த அர்ப்பணம் தேவைப்படுகிறது. இப்பணியில் முழுமையான கூட்டியக்கத் திருஅவையாக, **தூதுரைப் பணியாற்றும்** திருஅவையாக, நாம் பயணிக்க நம் செப உதவியையும், தாராள பொருளுதவியையும் வழங்குவோம். நம் பிள்ளைகள், இறையழைத்தல் பெற்றிட, தூதுரைப் பணியில் ஆர்வமுடன் பங்கேற்க, அவர்களை திருஅவை பணிக்காக **அர்ப்பணிக்க** முன் வருவோம்.

இன்றைய நாட்களில் கிறிஸ்துவின் சீடர்கள் ஆற்றும் நற்செய்திப்பணி சிறக்க, தூதுரைப் பணியின் அன்னையாகிய மரியாவின், தாயன்பின் பரிந்துரையை இறைஞ்சிக் கேட்போம். நம் அன்னையினுடைய அன்பில் கனிந்திடும் அக்கறையில் நனைந்தவர்களாக, அவருடைய கனிவு பாசம் ஆகியவற்றினின்று பிறக்கும் ஆற்றலைப் பெற்றவர்களாக, நம் அரசரும் மீட்பருமான இறைவன் வழங்கும், பெருவிருந்திற்கான அழைப்பை எல்லோருக்கும் கொண்டு சேர்க்க, அருள் ஆற்றல் வேண்டி இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்கள் மன்றாட்டு**

திருஅவையின் தலைவரே இறைவா!

1. திரு அவையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவற சகோதர சகோதரிகள், பொதுநிலையினர் ஆகிய திருஅவை, உம்மிடமிருந்து பெற்ற தூதுரைப்பணி ஆணைக்குப் பிரமாணிக்கமாயிருந்து, கூட்டியியக்கத் திருஅவையாக, ஒன்றிப்பு, பங்கேற்பு, தூதுரைப்பணி என்ற முப்பரிணாமக் குறிக்கோளுடன், சோர்வின்றி, சலிப்பின்றி சிரமங்கள், தடைகள், ஏற்படும்போது, மனந்தளராமலும், களைத்துப் போகாமலும், தூய ஆவியாரின் துணையோடு, திருத்தூதுப் பணியாற்றிட வரம் தர உம்மை மன்றாடுகிறோம்.

2. உலகெங்கும் சென்று நற்செய்தியை பறைசாற்ற அழைத்த இறைவா!

   உம் வாக்கினை ஏற்று, தங்கள் தாய் நாட்டினின்று புறப்பட்டு, நற்செய்தியை பெற்றிராத, அல்லது சமீபத்தில் பெற்றுக்கொண்ட பகுதிகளுக்கு, நற்செய்தியை கொண்டு செல்கின்ற தூதுரைப் பணியாளர்கள் அனைவரும், தூயஆவியாரின் துணையால், இடர்வரினும் தொடர் பணியாற்றவும், தூய ஆவியாரின் வரங்கள், கொடைகள், கனிகளைக் கொண்டு, பணியாற்றவும் - ஆண்டவர் அளிக்கும் சுவைமிக்க பண்டங்கள் நிறைந்த மாபெரும் விருந்துக்கு, எல்லோரையும் அழைத்து வர வரம் தர உம்மை மன்றாடுகிறோம்.

3. நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும் போது அனைவரையும் என்பால் ஈர்த்துக்கொள்வேன் என்றவரே இறைவா! ....

   இறையாட்சி பெருவிருந்துக்கான அழைப்பு, எல்லாருக்குமானது என்பதை புரிந்து, யாரும் விடுபட்டுவிடக் கூடாது என்ற, திருத்தூது பணியின் நோக்கத்தை உணர்ந்து, ஏழையர், உடல் ஊனமுற்றோர், பார்வையற்றோர், கால் ஊனமுற்றோர் என, சமூகத்தின் எல்லா நிலையினரையும் ஏற்று, எல்லாருக்குமான இறையாட்சி சமூகத்தை சமைத்திடவும், பாகுபாடு வேறுபாடு ஒழித்திடவும், இவ்வாறு ஆண்டவர் தரும் பெரும் விருந்தில் பங்கேற்கும் தகுதி பெற அருள் தர உம்மை மன்றாடுகிறோம்.

4. உலக முடிவு வரை எந்நாளும் எங்களோடு வாழும் இறைவா!

இவ்வுலகம் பற்றுக்கொள்ள தூண்டும்-மிகை நுகர்வு, சுயநலத்தில் ஊறிய சொகுசு வாழ்வு, செல்வம் சேர்த்தல், தனிநபர் முதன்மையியம் என்ற, பெரு விருந்துகளை தவிர்த்து... நற்செய்தி காட்டும் இறை பண்புகளான, அன்பு, மகிழ்ச்சி, பகிர்வு, நீதி, இறைவனுடனும் பிறருடனும் இயைந்த தோழமை உறவு ஆகியவற்றை உள்ளடக்கிய, இறைவன் வழங்கும் இன்றைய நற்கருணை திருவிருந்திலும், நிறைவு கால கூடுகையின்போது, இறைவன் தரும் பெரு விருந்திலும் பங்கு பெற, உமது தயவையும், மாபெரும் இரக்கத்தையும் பொழிந்திட உம்மை மன்றாடுகிறோம்.

5. உயிர்ப்பும் உயிரும் வாழ்வுமானவரே இறைவா!

ஒவ்வொரு திருப்பலியிலும், நம்பிக்கையாளர்கள் ஆர்ப்பரித்து கூறும் “ஆண்டவரே நீர் வருமளவும் உமது இறப்பினை அறிக்கையிடுகின்றோம், உமது உயிர்ப்பினையும் எடுத்துரைக்கின்றோம்”. என்ற மன்றாட்டு நம்பிக்கையாளர்கள் ஒவ்வெருவரையும் தூதுரைப்பணியில் ஊக்குவிக்கவும், ஊக்கப்படுத்தவும், ‘உமது ஆட்சி வருக’ என்ற விண்ணப்பத்தை உள்ளடக்கிய, ‘விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே’ என்ற எங்கள் அன்றாட வேண்டுதல்களும், நற்கருணை கொண்டாட்ட பங்கேற்பும், எங்களை எதிர்நோக்கின் திருப்பயணிகளாகவும், தூதுரைப் பணியாளர்களாகவும் உருமாற்றிடவும், இவ்வாறு நீர் எங்களுக்காக தயார்செய்துள்ள, ‘ஆட்டுக் குட்டியின் திருமணவிருந்து’ நோக்கி பயணிக்கவும், அருள் தர உம்மை மன்றாடுகிறோம்.

**நற்கருணை பெற்றுக்கொண்ட பிறகு மன்றாட்டு**

நற்கருணை வடிவில், எங்கள் இதயங்களில் எழுந்தருளியிருக்கும் இயேசுவே. உம் பேரன்புக்காக, உடனிருப்புக்காக உம்மை போற்றுகிறோம்.. புகழ்கிறோம்.. நன்றி கூறுகின்றோம். காணாமல் போன ஆடுகளாகிய, இஸ்ராயேல் மக்களை மட்டுமல்ல, தூர விலகி நிற்கும் ஆடுகளையும் சென்றடைந்த இயேசுவே.. உம் திருவிருந்து தரும் வல்லமையால், நீர் வரும்வரை, எல்லா மக்களினத்தாருக்கும், உமது உயிர்ப்பு செய்தியை கொண்டு செல்ல அருள் தாரும். தொடக்க திருஅவை, நற்செய்தி அறிவிப்பின் அவசரத்தை உணர்ந்து, ஊரெங்கும்.. நாடெங்கும் நற்செய்தி அறிவித்தது போன்று, நாங்களும் அவரவர் வாழ்க்கை நிலைக்கேற்ப, நற்செய்தி அறிவிப்பை எங்கள் உயிர் மூச்சாய் கொண்டிருக்க வரம் தாரும். தூய ஆவியாரின் தூண்டுதலால் மகிழ்ச்சி, பகிர்வு, நீதி, இறைவனுடனும் பிறருடனும் இயைந்த தோழமை உறவை, எங்கள் வாழ்க்கையில் பழக்கமாக்குவோமாக. நாங்கள் வாழ்வதும், இருப்பதும், இயங்குவதும் உம்மால் ஆகையால், எங்கள் உழைப்பின் பயனையும், தாராளமாய் நற்செய்தி பணிக்கு வழங்கிடவும், எம் பிள்ளைகளை நற்செய்தி பணிக்கு அர்பணிக்கவும் வரம் அருளும்.

யூபிலி 2025 நிகழ்விற்கு, சிறப்பாக தயாரிக்க, உம் திரு அவை இறைவேண்டலில் நிலைத்திருக்க செய்தருளும். அன்றாடம் நாங்கள் கொண்டாடும் நற்கருணை திருவிருந்து, எங்களை எதிர்நோக்கின் திருபயணிகளாகவும், தூதுரைப் பணியாளர்களாகவும் ஆக்குவதாக. நற்செய்திப் அறிவிப்பு பணியின் விண்மீன்னான புனித மரியாவின் பரிந்துரையும், உடனிருப்பும், நிறைவுகால பெருவிருந்திற்கு, எங்களை அழைத்து செல்வதாக. ஆமென்.

---------------------------